01.03.2023
OS 4/2020
வா.சா.1 சந்திரபிரியா
1,3முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

இந்த வழக்கை முதலில் எனது தகப்பனார் பழனிசாமிதான் தாக்கல்செய்தார். என் தகப்பனார் இந்த வழக்கில் 1ம் வாதி. இந்த வழக்கின் விவரங்களை தாக்கல் செய்வதற்காக என் தகப்பனார் தான் தகவல் தெரிவித்தார். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை படித்து பார்த்துள்ளேன். நான் எம்.பில், பி.எட் வரை படித்துள்ளேன். தாவா சொத்து கருத்தபுலியன்பட்டி கிராமத்தில் மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ளது. அதன் விஸ்தீரணம் 44 செண்ட். இந்த வழக்கு 3/4 பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 44செண்ட் நிலம் விவசாயம் செய்யாமல் தரிசாகதான் உள்ளது என்றால் முதலில் விவசாயம் செய்யப்பட்டு பின்னிட்டு தண்ணீர் வசதியில்லாததால் கம்பி வேலி போட்டு தரிசாக உள்ளது. எவ்வளவு நாட்களாக விவசாயம் செய்யாமல் உள்ளது என்றால் சுமார் 2வருடமாகத்தான் விவசாயம் செய்யாமல் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும், 02.02.1994ல் என் தகப்பனார் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே விவசாயம் செய்யாமல் காலியாக தரிசு நிலமாகத்தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியம் என்றால் சந்திரகுமார், தியாகராஜன், ராதாலெட்சுமி, உதயகுமார், கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக என் தகப்பனார் வழக்கு சொத்தில் வில்லங்கம் போட்டு பார்த்தாரா என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் நாராயணசாமி நாயுடுக்கு கூட்டுகுடும்பமாக பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. நாராயணசாமி எப்போது இறந்தார் என்பதும், அவருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்பதும் எனக்குத் தெரியாது. நாராயணசாமிக்கு அழகர்சாமிநாயுடு, பாண்டி ஆகிய இருமகன்கள் உள்ளார்கள் என்று வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. அழகர்சாமிநாயுடுவின் மனைவி பெயர் நானம்மாள். அழகர்சாமிநாயுடு இறந்த விவரத்தை பிரதிவாதிகள் நெடுந்தலைப்பில் காட்டியுள்ளோம் என்றால் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யப்படும்போது அழகர்சாமி உயிருடன் இருந்தார் என்றும், அவர் இறந்துவிட்டதாக சொல்லி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. அழகர்சாமி எப்போது இறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கொடிவழிஜாபிதாவில்

நாராயணசாமியின் மனைவி கண்ணம்மாள் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. இதுநாள் வரை பிராதை திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்தை என் தகப்பனார் எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1994ல் கிரையம் வாங்கினார். வா.சா.ஆ.1 கிரையபத்திரத்தைப் பற்றி ஓரளவிற்குத் தெரியும். முற்றிலுமாகத் தெரியாது. வா.சா.ஆ.1படி தாவா சொத்து நானம்மாளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள நிலையில் வா.சா.ஆ.1ல் உள்ள A-செட்டியூல் சொத்தானது நானம்மாளுக்கு ஆயுள்பாத்தியதை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும், சொத்தை பாராதீனம் செய்ய உரிமை வழங்கப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ.2 படி என் தகப்பனார் யாரிடம் கிரையம் வாங்கினார் என்றால் ராதாலெட்சுமி, நானம்மாள், சந்திரகுமார், கோபாலகிருஷ்ணன், தியாகராஜன் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.2 கிரையம் வாங்கிய காலத்தில் நானம்மாள் உயிருடன்தான் இருந்தார். என் தகப்பனார் தாவா சொத்தை கிரையம் வாங்கியபோது 5ம் பிரதிவாதி-கோபாலகிருஷ்ணன் இளவராக இருந்தார் என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதி-கோபாலகிருஷ்ணன் இளவராக இருந்தார் என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகள் குறைந்த வயதில் இருந்தார்கள் என்றும், தாய்-தகப்பனார் பராமரிப்பில் அவர்கள் சொல்கேட்டு அதன்படி நடந்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் தகப்பனார் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே தாவா சொத்தில் பல வில்லங்கங்கள் இருந்தன என்பது பற்றி எனக்குத் தெரியாது. அந்த வில்லங்கத்திலிருந்து தப்பிப்பதற்காகத்தான் என் தகப்பனாருக்கு மேற்படி ராதாலெட்சுமி, நானம்மாள், சந்திரகுமார், கோபாலகிருஷ்ணன், தியாகராஜன் நபர்கள் பெயரளவிற்கு கிரையம் செய்து வைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு விற்பனை தொகையை எவ்வளவு கொடுத்தார் என்று எனக்குத் தெரியும். வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி-உதயகுமார் கையொப்பம் செய்யவில்லை என்றால் இல்லை. அவர்களையும் ஏன் கட்டுப்படுத்தி கிரையம் வாங்கப்படவில்லை என்ற விவரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 கிரையத்தொகையானது 1, 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் உரிமை மாற்ற நோக்கத்தோடு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றும் அது மலரணையாக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

என் தகப்பனார் நேர்மையான முறையில் தாவா சொத்தை கிரையம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அடிப்படையில் தாவா சொத்து என்னுடைய தகப்பனாரின் சுவாதீனத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்படும்போது சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு என் தகப்பனாருக்கு என்ன வருமானம் இருந்தது என்றால் என் தகப்பனார் வங்கியில் மேற்பார்வையாளராக வேலை பார்த்தார். எனது அம்மா ஆசிரியராக வேலை பார்த்தார். கிரையத்தொகை வாங்குவதற்கான தொகையை 1994ல் வைத்திருந்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் அது பற்றி தெரியவில்லை. சொந்தத்தில் விவசாயம் பார்த்ததாக சொல்லியுள்ளேன். அதில் ஒருபோகம் நெல் விவசாயம் செய்யப்பட்டது. நானும், எனது தகப்பனாரும் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்ததாக சொல்வதற்கு ஆவணம் உள்ளது. தாவா சொத்தில் எப்போதிலிருந்து விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சொத்து வாங்கியதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறோம். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.